1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களையும் அதன் வருமானத்திற்கு ஏற்ப ஆறு தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் உள்ள ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரே சீரான சம்பள விகிதத்தை நிர்ணயம் செய்யத்தக்க அறிவுரைகள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் 2-4-73-ல் அனுப்பப்பட்டுள்ளன.

Details of the land declared as Temple Properties

* 30 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the 717-43 cents of land which have been declared as temple properties and mentioned in the Policy Note relating to the Hindu Religious and Charitable Endowments (Administration) Department?

திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலப்பரப்பின் விபரம்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் கண்டுள்ள, திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப்பெற்ற 717-43 செண்டு நிலப்பரப்பின் விபரம் யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஒரு விபரப் பட்டியல் @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

உடுக்குறியிடாத வினாக்கள்

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் கலைக்கல்லூரிகள்

1. **கே. திரு. எல். பலராமன் :** மாண்புமிகு கல்விஅமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் கல்லூரி வாரியாக எவ்வளவு பேர்?

@ 101-109 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS